★ எவர்சில்வர்
★ விளையாட்டுப் பொருள்கள்
★ பிளாஸ்டிக் பொருள்கள்
பெற்றுக் கொள்ள!
ஜெயா அழகு மாடம்
177, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு
Registered as a Newspaper
# உதயன்
விலை ரூபா 5-00

வியாபாரிகளே உங்களுக்குத் தேவையான
★ அழகு சாதன பொருள்கள்
★ தையல் பொருள்கள்
★ பாடசாலை உபகரணங்கள்
பெற்றுக் கொள்ள!
ஜெயா அழகு மாடம்
177, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 14 சனிக்கிழமை (30 - 07 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 244

# உணவுக் கப்பல்கள் வடக்கே வருவதில் தாமதம் ஏற்படும்!

## றுகுணு மீதான சோதனை முடியும் வரை தடை

யாழ்ப்பாணம், ஜூலை 30

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வரும் கப்பல்கள், வடக்கே வந்து சேர்வதில் கால தாமதம் ஏற்படலாம் என அறிய வருகிறது.

'றுகுணு' கப்பலில் தாம் நடத்தி வரும் சோதனையும், அதில் "யூரியா" உரம் ஏற்றப்பட்டது சம்பந்தமான விசாரணையும் முடியும் வரை வடக்கே சேவையில் ஈடுபடும் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் நுழையக் கூடாது என்று படையினர் "தடை" விதித்துள்ளதாக அறியப்படுகிறது.

படையினரின் இந்தத் "தடை" நீங்குவதற்கு சில வாரங்களாகலாம் என்று கொழும்பில் புனர்வாழ்வு அமைச்சு வட்டாரங்கள் கருதுவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் பருத்தித்துறையில் பொருள்களை இறக்கிவிட்டு நேற்று முன்தினம் கொழும்பு நோக்கிப் புறப்பட்ட கோமாரி, மாஹோ கப்பல்களும் தாமதமாகவே மீண்டும் பருத்தித்துறைக்கு வந்துசேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை உரவகைகள் உட்பட பலபொருள்களை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறை நோக்கிப் புறப்பட இருந்த சமயம் றுகுணு கப்பல் திடீர் என நிறுத்தப்பட்டு கப்பல் படையினரால் சோதனை செய்யப்பட்டு வருவது தெரிந்ததே.

தடை செய்யப்பட்ட யூரியா அடங்கிய இரு பொதிகள் கப்பலில் கண்டு பிடிக்கப்பட்டதாகப் படையினர் தெரிவிக்கின்றனர்.

றுகுணு கப்பல் துறைமுகத்தை விட்டுப் புறப்படு முன்னர் வடபகுதிக்குச் சேவையில் ஈடுபட்டுள்ள வேறு கப்பல்களை துறைமுகத்துக்குள் அனுமதிக்க வேண்டாம் என்ற படையினரின் உத்தரவை அடுத்து, கோமாரி, மாஹோ கப்பல்களில் இம்முறை தாமதமாகவே பொருள்கள் ஏற்றப்படும் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-3)

## றுகுணு கப்பல் இன்னும் புறப்படவில்லை

### துறைமுகத்தில் தங்கி நிற்கிறது

யாழ்ப்பாணம், ஜூலை 30

கொழும்பு துறைமுகத்தில் கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்ட 'றுகுணு' கப்பல் தொடர்ந்து சோதனை செய்யப்படுவதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்துக்கான உரவகைகள் மற்றும் பொருள்கள் இக்கப்பலில் ஏற்றப்பட்டு கப்பல் வடக்கே புறப்படத் தயாரானபோது —

கடற்படையினர் தடுத்து அக்கப்பலை சோதனை செய்து வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இக்கப்பலில் உள்ள பொருள்கள் சோதனை செய்யப்படுவதாகவும் —

இக்கப்பல் வடக்கு நோக்கி புறப்பட நாள் எடுக்கும் என்றும் — கொழும்பிலிருந்து நேற்று தகவல் கிடைத்தது. (இ-3)

## அனுமதி அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாணவர்களின் அனுமதி அட்டைகள் கோட்டக் கல்வி அலுவலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அதிபர்கள் அவற்றை அங்கிருந்து பெற்றுக்கொள்ளுமாறும் யாழ். வலயம்-1 கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## ஊர்காவற்றுறை பகுதியில் புலிகள் ஊடுருவ முயற்சி

### படையினருடன் மோதல்

கொழும்பு, ஜூலை 30

ஊர்காவற்றுறையில் உள்ள படையினரின் முன்னணி பாதுகாப்பு இடங்களுக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவ முற்பட்டபோது இருதரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் இதனைத் தெரிவித்துள்ளது.

இரண்டாவது மோதல் சம்பவம் குறிஞ்சாத்தீவு என்னும் இடத்தில் இடம்பெற்றது. படையினர் தேடுதல் நடத்தியபோது இம்மோதல் இடம்பெற்றதாகவும் அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

## திருமலையில் அமைதி குலையலாம் என அச்சம்

கொழும்பு, ஜூலை 30

தற்போது அமைதி நிலவி வரும் திருமலை நகரம் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலால் அமைதியை இழக்கும் துர்ப்பாக்கிய நிலையை அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் பிரசாரம் திருமலையில் பழைய காயங்களை கிளறிவிட்டு இனமோதல்களைத் தூண்டிவிடக் கூடும் என தமிழர்கள் எதிர்பார்ப்பதாக செய்தியாளரை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

அங்கு தமிழ் மக்கள் பதற்றமான நிலையில் உள்ளனர் என்றும், தேர்தல் சமயத்தில் பிரிவினை கோஷங்கள் எழுப்பப்படும்போது புதிய இனப் பிரச்சினை அங்கு உருவாகலாம் என்றும் தமிழர்கள் அஞ்சுவதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-ஐ)

## ஸ்பெயினில் நேற்று கார்க்குண்டு வெடிப்பில் இராணுவ ஜெனரல் பலி

மாட்ரிட், ஜூலை 30

ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டில் நேற்று இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் அந்த நாட்டின் சிரேஷ்ட இராணுவ ஜெனரல் ஒருவர் கொல்லப்பட்டார். அவரது மெய்ப்பாதுகாவலரும் அப்போது உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாஸ்க் பிரிவினைவாத கெரில்லாக்களே இத்தாக்குதலை நடத்தியிருக்கக்கூடும் என்று ஸ்பெயின் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

## தேர்தல் வன்முறையால் இதுவரை 9 பேர் பலி!

கொழும்பு, ஜூலை 30

நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் நேற்றுவரை இடம்பெற்ற அரசியல் வன்செயல்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒன்பதாக அதிகரித்துள்ளது.

கடைசியாக அனுராதபுரத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவாளரான 35 வயது திஸாரநாயக்க என்பவர் கொல்லப்பட்டார். (இ-எ-6)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 30

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஐ-3)

## போராளி வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 30

அராலித்துறைப் பகுதியில் கடந்த புதன்று படையினருடன் இடம்பெற்ற மோதலில் வீரவேங்கை கப்டன் சிந்து (செபஸ்டின் மொறாய்ஸ் அலோசியஸ் மொறாய்ஸ் — செல்வபுரம் மண்டைதீவு) என்ற போராளி வீரச்சாவடைந்தார். (ஐ)

## நஸ்ரினை கைது செய்ய கோரி ஆர்ப்பாட்டம்

டாக்கா, ஜூலை 30

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நேற்று இஸ்லாமிய அடிப்படை வாதிகள் இரண்டு பெரிய ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தினர் என்று அறிவிக்கப்படுகிறது.

இஸ்லாத்தை நிந்தனை செய்யும் "லஜ்ஜா" என்ற நூலை எழுதியதற்காக அதன் ஆசிரியர் தஸ்லிமா நஸ்ரினை கைது செய்து மரண தண்டனைக்கு உட்படுத்துமாறு பங்களாதேஷ் அரசாங்கத்தை கோருவதற்காக இப்பேரணிகள் நடத்தப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

நஸ்றின் கடந்த இரண்டு மாதங்களாக டாக்காவில் தலைமறைவாக இருந்து வருகின்றார். (இ-எ)

# வன்முறைகளில் ஈடுபடுவோரை கட்டுப்படுத்த முடியாத நிலைமை

## ஆளும்கட்சி அரசியல்வாதிகள் தலையிடுவதாக குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 30

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய அரசியல்வாதிகளின் அழுத்தம் காரணமாக, தேர்தல் வன்செயல்களில் ஈடுபடுவோர் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக பொலிஸ் தலைமை அலுவலகம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட சுவரொட்டிகள், பதாகைகளை அகற்றிய களுத்துறை மாவட்ட பொலிஸ் அதிகாரிகள் சிலருக்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் குண்டர் குழுக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் தனது வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் ஆயுதந்தரித்த இரண்டு பொலிஸாரை பாதுகாப்புக்கு வழங்குமாறு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி விடுத்த வேண்டுகோளை பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துவிட்டது. (இ-எ 6)

## ஆயுதங்களை ஒப்படைக்க அரசியல்வாதிகளுக்கு பணிப்பு

தென்பகுதியில் தேர்தல் வன்செயல்கள் அதிகரித்து வருவதை அடுத்து சொந்தப் பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட சகல ஆயுதங்களையும் மீள ஒப்படைக்கும்படி அரசியல்வாதிகள் அனைவருக்கும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க கோரிக்கை விடுத்திருக்கிறார்.

அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள், கருத்திட்ட அமைச்சர்கள் உட்பட சுமார் 90 பேர் ஆயுதங்களுடன் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ-6)

## ஐ. நா. அதிகாரிகள் நேற்று மந்திகை ஆஸ்பத்திரி விஜயம்

வடமராட்சி, ஜூலை 30

யாழ்ப்பாணம் வந்துள்ள ஐ. நா. தொண்டர் பிரிவின் திட்ட அதிகாரி திரு. ரப்பான் குமார் பார்மன், ஐ. நா. அபிவிருத்தித்திட்ட அதிகாரி திரு. மல்கம் ரிட் அவுட் ஆகிய இருவரும் நேற்று நண்பகல் மந்திகை ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்தனர்.

வடபகுதியில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் ஐ.நா.வின் தொண்டர் டாக்டர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கான (— வேற்பாடு)களை மேற்கொள்வதற்காக இங்கு வந்துள்ள இவர்கள் மந்திகை ஆஸ்பத்திரியை பார்வையிட்டனர். பதில் மாவட்ட வைத்திய அதிகாரியான குழந்தை மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் குழந்தைவடிவேலை அவர்கள் அங்கு சந்தித்து உரையாடினர்.

மந்திகை ஆஸ்பத்திரியில் தற்போது நிலவும் டாக்டர்கள் பற்றாக்குறை, மற்றும் மின்சார வசதியின்மை மல

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கட்சிக் கூட்டங்களில் ஹேமா கலந்து கொள்ளமாட்டார்!

கொழும்பு, ஜூலை 30

தேர்தல் காலத்தில் எந்த அரசியல் கட்சியின் பிரசாரக் கூட்டங்களிலும் ஹேமா பிரேமதாஸா கலந்துகொள்ளமாட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

ஹேமாவுக்கு நெருங்கிய நண்பர் ஒருவரை மேற்கோள் காட்டி அரசக் கட்டுப்பாட்டிலுள்ள டெய்லி நியூஸ் பத்திரிகை முன்னணிச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

அரசியல் மேடைகளில் அவர் தோன்றாததை வைத்துக்கொண்டு, ஐக்கிய தேசியக் கட்சியின் மீது அவருக்கு இருந்த பற்றுக் குறைந்து விட்டதாகக் கருதக் கூடாது என்றும் ஹேமாவின் நண்பர் தெரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆ. க. வெ. சமரின் 3 ஆம் ஆண்டு நினைவு நாள்

யாழ்ப்பாணம், ஜூலை 30

ஆனையிறவு இராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட ஆகாய கடல் வெளிச் சமரின் மூன்றாம் ஆண்டு நினைவு நாள் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆகும்.

அந்த வரலாற்றுச் சமரில் வீரச்சாவடைந்த வேங்கைகளின் 3 ஆம் ஆண்டு நினைவு நாள் வீரவணக்கக் கூட்டம் நாளை மாலை 5 மணிக்கு கொடிகாமத்தில் உள்ள ஆ. க. வெ. மாவீரர் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

## காம்பிய ஜனாதிபதிக்கு செனகல் தஞ்சம்

டாக்கர், ஜூலை 30

இராணுவத்தினர் நடத்திய இரத்தம் சிந்தாப் புரட்சி மூலம் பதவி நீக்கம் செய்யப்பட்ட காம்பியாவின் ஜனாதிபதி ஜௌடா ஜவாராக்கு செனகல் நாடு அரசியல் தஞ்சமளித்துள்ளது.

கடந்த 23 ஆம் திகதி அவர், இராணுவப் புரட்சியைத் தொடர்ந்து அமெரிக்க யுத்தக் கப்பல் ஒன்றின் மூலம் செனகல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அப்புத்தளையில் எதிரணியினர் கூட்டத்தில் மக்கள் வெள்ளம்

கொழும்பு, ஜூலை 30

அப்புத்தளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரசாரக் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இக்கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்பு, பொதுமக்கள் குழுக்கள், குழுக்களாக கோஷங்களை எழுப்பியவண்ணம் கால்நடையாக கூட்டம் நடைபெற்ற மைதானத்தை வந்தடைந்தனர்.

இது சிறப்பம்சமாக இருந்தது என்று வெரித்தாஸ் வானொலியின் சிங்களச் சேவையில் தெரிவிக்கப்பட்டது.

தோட்டப்பகுதி மக்களும் இக்கூட்டத்தில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர் என்றும் —

இக்கூட்டத்தில் பேசுவதற்காக சந்திரிகா நேற்று அதிகாலை வந்தபோது, பெரும் எண்ணிக்கையில் தாய்மார் குழந்தைகளை மடியில் வைத்துக்கொண்டு, குளிரையும் பொருட்படுத்தாது ஆவலுடன் காத்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதனை குறிப்பிடத்தக்க நிகழ்வாக வெரித்தாஸ் தெரிவித்தது. (இ-எ-6)

## எதிரணி ஆதரவாளர் வீடுகள் தாக்குதல்!

கொழும்பு, ஜூலை 30

அப்புத்தளையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முக்கியஸ்தர்கள் சிலரின் வீடுகள் ஐ.தே.க. ஆதரவாளர்களினால் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

அப்புத்தளை நகரில் நேற்று முன்தினம் மாலை ஆரம்பமான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரசாரக் கூட்டம் நேற்று அதிகாலை முடிவடைந்த பின்னரே இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என்ற தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவலை முன்னாள் சுதந்திரக் கட்சி எம்.பி திருமதி ஹேமா இரத்தினாயக்கா தெரிவித்தார். [இ-எ-6]

## நரோமா இன்று வருகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 30

திருகோணமலையில் இருந்து ஒரு தொகுதி பயணிகளுடன் இன்று பருத்தித்துறைக்கு வந்துசேரும் "நரோமா" கப்பல் கொழும்பு செல்லும் பயணிகளை ஏற்றிக்கொண்டு இன்று மாலையே திருகோணமலை திரும்பும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## வெற்றி நிச்சயம் என்கிறார் சந்திரிகா

கொழும்பு, ஜூலை 30

பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டுவது நிச்சயமானதாகும் என்று மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்தார்.

அப்புத்தளை நகரில் நடந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரசாரக் கூட்டத்தில் நேற்று அதிகாலை பேசியபோது அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆட்சியில் அனைத்து உரிமைகளும் மக்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டியவுடன், முன்னணி ஆதரவாளர்கள் எதிர்க் கட்சியினரை சகோதரர்களாக நடத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். (இ-எ-6)

## முச்சந்தி முரளி



அமைச்சர்மாரிடம் ஆயுதங்களை மீளப்பெற்றால்... தேர்தல் களைகட்டாமல் போய்விடும் பாருங்கோ!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் வ. ஆறுமுகம்

அவர்களின்

## மணி விழா



கல்வியியற்றுறையில் தமிழ் அறிஞர்களின் பங்களிப்பு சிறப்பிடம் பெறுகிறது. இவர்களில் குறித்த ஒரு துறையில் துறைபோந்த அறிவுபெற்று ஆழ்ந்தமைந்த அறிஞர்களாக போற்றப்படுபவர் சிலர். மேலும் பரந்த அறிவுடன் அத்துறையில் ஒரு மறுமலர்ச்சியை அல்லது ஒரு புதிய பார்வையைச் செலுத்தியவர்கள் மிகச்சிலரே. அவர்களில் ஒருவராக விளங்குபவர் பேராசிரியர் ஆறுமுகம் அவர்கள். கல்வியியற்துறையில் கல்வியின் இலக்கு என்பன பற்றியும், தேசிய நோக்கிற்கேற்ப பயன் உள்ள முறையில் அவை எவ்வாறு மாற்றியமைக்கப்படவேண்டும் என்பதையும், காலத்துக்குக் காலம் ஏற்படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் அரசுகளின் கொள்கைக்கேற்ப எவ்வாறு முரண்பட்டு குழப்ப நிலையை அடைந்தன. என்பன போன்ற விடயங்களில் பல ஆய்வுகளைச் செய்து இலங்கையின் பிரச்சினைகளுக்கு தீர்வைச் சுட்டிக்காட்டி உள்ளார். இவ் ஆய்வுகள் ஒரு பிரதேச மட்டத்து சிக்கல்களை மட்டும் மையமாகக் கொள்ளாமல் முழுத்தீவின் கல்விச் செயற்பாடுகளையும் மையமாக நோக்கப்பட்டதால் அரசே கவனம் செலுத்த வேண்டிய கருத்துக்களை எடுத்துக் காட்டியுள்ளார்.

பல்கலைக்கழகங்கள் பல்துறை அறிஞரின் சேவையை உள்ளடக்குகின்றன. அவை பல்துறை ஆய்வு மையங்களாகவும் விளங்குகின்றன. மேலும் இவர்கள் ஓர் ஆகிய சமுதாயத்துக்கே வழிகாட்டிகளாக விளங்குகிறார்கள். சிறப்பாக யாழ். பல்கலைக்கழகம் தமிழர்களின் நாடித்துடிப்பாக விளங்குகிறது.

இத்தகைய உயர் கல்விப்பீடத்தில் கல்வியியற்றுறைப் பேராசிரியரும், அத்துறைத் தலைவருமான பேராசிரியர் ஆறுமுகம் அவர்களின் சேவையை அறிவுலகம் நன்கறியும். அன்னார் பணி சிறக்கவும் மணிவிழா சிறப்புறவும் அன்புடன் இறைவனை வேண்டி அமைகின்றேன்.

திரு. கா. மாணிக்கவாசகர்
(அரச அதிபரும் மாவட்ட ஆணையாளரும், யாழ். மாவட்டம்)

---

மணி விழா நிகழ்ச்சி நிரல்

காலம்: **30-07-1994**
சனிக்கிழமை மாலை 6.00 மணி

இடம்: உரும்பிராய்
ஞானவைரவர் கோயிலடி
பொதுப்பணி மன்றங்கள் வளாகம்

பிரதம விருந்தினர்:
திரு. கா. மாணிக்கவாசகர் (அரச அதிபரும், மாவட்ட ஆணையாளரும், யாழ் மாவட்டம்)

கௌரவ விருந்தினர்கள்:
திரு. வே. இளங்குமரன் (பொறுப்பாளர், தமிழீழக் கல்வி மேம்பாட்டுக் கழகம்)
திரு. க. கேதீஸ்வரன் (பிரதேசச் செயலரும், உ. அ. அதிபரும், வலி - கிழக்கு)

தலைவர்: திரு. அ. க. த. கிருஷ்ணராசா (மணிவிழாச் சபைத் தலைவர்)

நிகழ்ச்சி நிரல்

மங்கள இசை:
திரு. வி. கே. கானமூர்த்தி
திரு. வி. கே. பஞ்சமூர்த்தி குழுவினர்

இறை வணக்கம் தமிழ்த் தாய் வாழ்த்து:
திரு. செ. ஞானசொரூபன் (யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவு மாணவன்)

அகவணக்கம்: ஆசியுரை:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
வணபிதா ஏ. ஜெ. வி. சந்திரகாந்தன்
திருமதி தாயபூபதி சிதம்பரநாதன்

சிறப்புவிருந்தினர் வாழ்த்துரைகள்:
பேராசிரியர் அ. சண்முகதாஸ் (தலைவர், தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம்)
கலாநிதி சி. க. சிற்றம்பலம் (தலைவர், வரலாற்றுத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)
திரு. சே. ஏகாம்பரநாதன் (முன்னாள்பிரதிக்கல்விப்பணிப்பாளர், வடமராட்சி)
திரு. எஸ். சிவலிங்கராசா (சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
கவிஞர் சோ. பத்மநாதன் (உப அதிபர், பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி)
திரு. க. சின்னத்தம்பி (சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியற்றுறை யாழ் பல்கலைக்கழகம்)
திரு. ஏ. பஞ்சலிங்கம் (அதிபர் யாழ். இந்துக்கல்லூரி)
திரு. இ. ஜெயராஜ் (அமைப்பாளர், அகில இலங்கைக் கம்பன் கழகம்)
திரு. ஈ. சரவணபவன் (தலைவர், யழ். றோட்டறிக் கழகம்)

கௌரவ விருந்தினர் உரை.
பிரதம விருந்தினர் உரை:
பொன்னாடை போர்த்தலும் கௌரவித்தலும்.
வாழ்த்துப்பா:
கலைமணி திருமதி இந்திரலேகா ஜினி சர்வேஸ்வரன் (இசை ஆசிரியை, உரும்பிராய் இந்துக்கல்லூரி)
விழா நாயகர் உரை:

பட்டி மண்டபம்

பொருள்:
இன்றைய அறிவியல் வளர்ச்சியில் மானுட வெற்றிக்கு நம் பாரம்பரியக் கல்வி முறை

| ★ பயன் தரும் | ★ பயன் தராது |
|---|---|
| திரு. தி. திருநந்தகுமார் | திரு. இ. செல்வவடிவேல் |
| திரு. த. சிவகுமாரன் | திரு. ஆ. திருமுருகன் |
| திரு. த. சிவசங்கர் | திரு. க. குமாரதாசன் |

நடுவர்: திரு. இ. ஜெயராஜ்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
இவ்வண்ணம்,
மேற்படி விழாச் சபையினர்.

---

இந்நிகழ்வு சிறப்புற வாழ்த்தும்:

பிரபா பல்பொருள் வர்த்தக நிலையம் உரும்பிராய். [32144]

நித்தியா பாடசாலை சேவை உரும்பிராய்

# இன்றைய நிகழ்ச்சி

''புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பழைய ஏற்பாட்டைக் கையாளும் முறைகள்'' எனும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இன்று சனிக்கிழமை காலை 9-00 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சுண்டிக்குளி சோமசுந்தரம் வீதியில் உள்ள இறை மக்கள் பயிற்சி நிலையத்தில் இடம் பெறும்.

மருதனார்மடம், இறையியற் கல்லூரி விரிவுரையாளர் அருட்திரு. ஜீ. டி. ஆனந்தராஜன் அடிகளார் கருத்துரை வழங்குவார். (ஓ)

★ ★ ★

யாழ். பிரதான வீதி, திருமறைக் கலாமன்றக் கேட்போர் கூடத்தில் இன்று சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு சைவ சித்தாந்த ஆய்வு வட்டத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழாவும், கருத்தரங்கும் நடைபெறும்.

வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் தலைமையில் திரு. வே. யுகபாலசிங்கம் ''திருக்களிற்றுப் படியார்'' என்னும் தலைப்பில் சைவ சித்தாந்த ஆய்வுக் கருத்துரை நிகழ்த்துவார். (ஐ-51)

★ ★ ★

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி வடக்கு பிரிவிற்கு புதிதாக தொண்டர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான கூட்டம் இன்று (சனி) பிற்பகல் 2 மணிக்கு வலி வடக்கு பிரிவு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. தொண்டர்களாக சேர்ந்துகொள்ளவிரும்பும் ஆண்களை அங்கு சமுக மளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ 15)

★ ★ ★

பொன்னாலை ச. ச. நிலையத்தின் பாபுஜீ பாலர் பாடசாலைவிளையாட்டுப் போட்டி இன்று (சனி) பிற்பகல் 1-30 மணிக்கு ச. ச. நிலையத் தலைவர் திரு. ந. தேவகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-15)

★ ★ ★

தமிழீழத் திருவள்ளுவர் மன்றம் நடத்தும் திருக்குறள் மனப்போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவை இன்றும் நாளையும் நடைபெறும்.

பாடசாலை மாணவர் மட்டத்தில் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என்றஅடிப்படையில் போட்டிகள் நடைபெறவுள்ளன. (உ-11)

★ ★ ★

அரசாங்க நிர்வாக சேவை அனுமதி பரீட்சைக்கான இலவச கல்வி நெறி இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையில் ஆரம்பித்து வைக்கப் படும்.

யாழ். பிரதேச செயலாளர் திரு. க. குணராசா இந்த இலவச கல்வி நெறியை ஆரம்பித்து வைப்பார். (ஓ-17)

★ ★ ★

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையால் வெளியிடப்படும் ஜூன்மாதத்திற்கான சஞ்சிகை இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு வெளியிடப்படும். யாழ். உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் நூலை வெளியிட்டு வைப்பார்.

★ ★ ★

அராலி தெற்கு விளையாட்டுக் கழகங்களிடையே அராலி தெற்கு கலைத்துறை வி. கழகம் நடத்தும் விளையாட்டுப் போட்டிகள் இன்று (சனி) பிற்பகல் ஒரு மணி முதல் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன. (ஐ 12)

★ ★ ★

தமிழ் சோதிடர் ஒன்றியத்தின் வாராந்த சோதிட வகுப்பும் ஆய்வரங்கும் இன்று சனி பிற்பகல் 3 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றியப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

''கேந்திரமும் திரிகோணமும்'' என்ற தலைப்பில் திரு. ஐயா சச்சிதானந்தனும், ''மாந்தி என்ற குளிகன்'' என்னும் விடயம் பற்றி திரு. எஸ். கதிர்காமநாதனும் தமது ஆய்வுரை நிகழ்த்துவர்.

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன ச. ச. நிலையம் குமரன் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் ஆதரவில் இயங்கும் பாலர் பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டி கோண்டாவில் கிழக்கு இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் இன்று [சனி] பிற்பகல் 2 மணி முதல் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் திருமதி க. சிவசிதம்பரம் கலந்து கொள்வார்.

## பயிற்சி தேர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆகிய இடங்களில் இன்று நடைபெற விருந்த தொண்டர் ஆசிரியர்களுக்கான பயிற்சித் தேர்வு திட்டமிட்டபடி இன்று நடைபெற மாட்டாது.

அந்தத் தேர்வு எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். தென்மராட்சி கோட்ட ஆசிரியர்களுக்கான தேர்வு மட்டுவில் மகா வித்தியாலயத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாளை

அகில இலங்கை சர்வமத போராசனஸ்தாபனத்தால் நடத்தப்படும் மாதாந்தக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும். (க)

★ ★ ★

யாழ். திருமறைக் கலாமன்றம் யாழ் மாவட்ட மட்டத்தில் நடத்திவந்த விவிலிய நாட்டுக் கூத்துப் போட்டியின் இறுதிப் போட்டி நாளை (ஞாயிறு) மாலை 6 30 மணிக்கு மன்றக் கலையரங்கில் நடைபெறவுள்ளது. (ஐ 51)

## ஆலயங்களில்

கன்னாகம் ஸ்ரீ சந்திரமௌலீசன் தேவஸ்தான ஸ்ரீ சௌந்தரம்பிகை வாசக ஆடிப்பூர வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். தேர்த் திருவிழா ஆகஸ்ட் 8 ஆம் திகதி இடம்பெறும். (க-89)

★ ★ ★

யாழ். வண்ணை ஸ்ரீ மத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி கோயில் வருடாந்த உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி பதினொரு தினங்கள் நடைபெறும்.

ஆகஸ்ட் 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9-15 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (க-111)

★ ★ ★

நாயன்மார்கட்டு அருள்மிகு இராசராசேஸ்வரி (பேச்சி) அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10-45 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 8 ஆம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த் தோற்சவமும் இடம் பெறும். (ஒ)

★ ★ ★

சித்தன்கேணி ஸ்ரீ ஞான வைரவர் கோவிலின் அலங்கார உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது. உற்சவ நாட்களில் தினமும் மாலை சைவப்புலவர் எம். எஸ். ஸ்ரீதயாளனின் தெய்வீக தொடர் சொற்பொழிவு இடம்பெறும். (ஐ-28)

## மழலைக் கலையமுதம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

இருபாலை எக்ஸிபிறஸ் கல்வி நிலையத்தின் பாலர் கல்விப் பிரிவு வழங்கும் மழலைக் கலை முதம் நிகழ்ச்சி நாளை மறுதினம் (திங்கள்) பிற்பகல் 2 மணி முதல் நிறுவன அரங்கில் நடைபெறவுள்ளது.

நிறுவனத்தின் தலைவர் திரு. த. வரதராஜா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக பலாலி ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபர் திரு. ஆர். எஸ். நடராசாவும் —

சிறப்பு விருந்தினராக விடுதலைப் புலிகள் மகளிர்படையணி மருத்துவப் பொறுப்பாளர் செல்வி எஸ். ஜெனியும் கலந்து கொள்வர். (ஐ)

## இணையத்துக்கு புதிய தலைவர்

யாழ் மாவட்ட அரச சார்பற்ற அமைப்புகளின் இணையத் தலைவராக வண. எஸ். எச். ஜெயநேசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நற்சமூக நடுநிலையத்தில் யாழ். மாவட்ட இணைப்பாளராக அவர் ஏற்கனவே பணியாற்றி வருகிறார். (ஐ-5)

தென்பகுதியில்

## எந்த அரசியல் கட்சியையும் ஈ. பி. டி. பி. ஆதரிக்காதாம்

தென்பகுதியில் எந்தக் கட்சியையும் ஆதரிக்கப்போவதில்லை என்று ஈ. பி. டி. பி இயக்கம் அறிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளை தோற்கடிப்பதற்கு, எந்த அரசாங்கத்தையும் ஈ. பி. டி. பி. ஆதரிக்கும் என்று அக்கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஏனைய அரசியல் கட்சிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவதென்ற அரசின் முடிவு, ஈ பி டி பிக்குப் பொருந்தாது என்றும்— ஈ. பி. டி. பி அரச படையினருடன் இணைந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக சண்டையிட்டு வருவதே அதற்குக் காரணம் என்றும் அவர் கூறினார். (எ)

---

அளவெட்டி
பெருமாக்கடவைப் பிள்ளையார் கோவில் தொண்டர் சபை நடத்தும்
மாபெரும்

### மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

காலம்: 31 - 07 - 1994 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி

இடம்: சந்தரோடை மைதானம்

| | | |
|---|---|---|
| A பிரிவு | 1 ஆம் பரிசு | தங்கப்பதக்கம் |
| B பிரிவு | 1 ஆம் பரிசு | தங்கப்பதக்கம் |
| C பிரிவு | 1 ஆம் பரிசு | தங்கப்பதக்கம் |

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

விளம்பர அனுசரணை:
விவசாய கைத்தொழில் இயந்திரவியல் தொழிலகம் நீதிமன்ற வீதி, மல்லாகம்.
தவம் இயந்திரவியல் தொழிலகம் பலாலி வீதி, கோண்டாவில்.
(7283)

---

### 01-08-1994 யாழ். இந்துக் கல்லூரியில்

## மதுர விழா

✲ சென்றலைற்ஸ் மாணவர்கள் வழங்கும்
**''மாற்றம் வேண்டும்''** தாளலயம்

✲ கம்பன் கழகப் பேச்சாளர்கள் பங்கு பற்றும்
**வழக்காடு மன்றம்**

குற்றவாளிக் கூண்டில்: ''பழைமைவாதிகள்''
நீதிபதி திரு. க. சிவராமலிங்கம் B. A.

| வாதிகள்: | பிரதிவாதிகள்: |
|---|---|
| திரு. இரா. செல்வவடிவேல் | திரு. த. சிவகுமாரன் |
| திரு: திருநந்தகுமார் | திரு ஆறு திருமுருகன் |

✲ காந்தி சனசமூக நிலையம் வழங்கும்
T. பாபுவின் **எல்லையைக் காப்போம்** தாளலய நாடகம்

✲ அரிபாலை சுகிர்தாலயா கலையகம் வழங்கும்
உதயகுமாரின் **''அலங்கோலம்''** நாடகம்
(அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா நாடகப் போட்டியில் முதலாம் இடம்பெற்ற நாடகம்)

★ அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:
**லிங்கம் கூல் பார்**
(32152)

---

## கால்நடை வளர்ப்போரே, விவசாயிகளே, கைத்தொழில் சிறுகைத்தொழில் வல்லுநர்களே, விஞ்ஞான தொழில்நுட்ப ஆர்வலர்களே!

**நல்லூர்க் கண்காட்சி 1994**

✲ உங்கள் திறமைகள்
✲ உங்கள் கண்டுபிடிப்புகள்
✲ உங்கள் ஆற்றல்கள்

உங்களது வீட்டில், உங்களது கிராமத்தில் தெரிந்தால் மாத்திரம் போதுமா?

✲ அவற்றினை
✲ மாவட்ட மட்டத்திலும்
★ தமிழீழ அளவிலும் வெளிக்கொண்டுவர வேண்டாமா?

12-08 1994ஆம் திகதி தொடக்கம் 10-09-1994ஆம் திகதி வரை நல்லூரில் எம்மால் நடாத்தவுள்ள பொருண்மியக் கண்காட்சியில் கலந்து கொண்டு

✲ உங்கள் பெருமையை

நாடளாவிய ரீதியில் வெளிப்படுத்துவதுடன் பெறுமதி மிக்க பரிசில்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

✲ விவசாயத்துறையில் நீங்கள் பயிரிட்ட பயிரின் மூலம்

அதிக விளைச்சலைப் பெற்றிருக்கலாம், தரமான சுவையான விவசாய உற்பத்திகளாயிருக்கலாம். விலங்கு வேளாண்மைத்துறையில் உங்களிடம் உள்ள கால்நடைகள் ஏனையோரிடம் உள்ளதை விட வித்தியாசமானதாக இருக்கலாம்.

புதிய தொழில் நுட்பத்தை நீங்கள் கண்டுபிடித்திருக்கலாம்,
புதிய இயந்திர சாதனங்களை நீங்கள் வடிவமைத்திருக்கலாம்,
எனவே
உங்கள் தனித்துவத்தை ஏன் நீங்கள் வெளிக்கொண்டு வரக்கூடாது?

மேலதிக விவரங்களை:

உங்கள் பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்கள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்ட, கோட்ட அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**
(சி-8806)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவு பகுதியிலிருந்து தினமும் ஷெல்-பீரங்கித் தாக்குதல்கள்!

யாழ்ப்பாணம் ஜூலை 30 தீவுப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் குடாநாட்டின் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல்-பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை, பொன்னாலை கடற்பிராந்தியத்திலிருந்து வியாழன் மாலை 4 மணிக்கு, பொன்னாலை, மூளாய், அராலி கரையோரப் பகுதிகளை நோக்கி கடற்படையினர் பீரங்கித்தாக்குதலை மேற்கொண்டனர்.

இச்சம்பவத்தின்போது சில பீரங்கிக் குண்டுகள் குடியிருப்புப் பகுதிகளிலும் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து கடந்த புதன் இரவு யாழ்ப்பாணம் கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை யாழ். நகர் கரையோரப்பகுதியை நோக்கி பரா வெளிச்சக் குண்டுகளும் ஏவப்பட்டன.

இச்சம்பவத்தை அடுத்து மீனவர் தொழிலை இடைநிறுத்தி கரையை அடைந்தனர். (இ-17-51-15)

## உள்ளூராட்சித் தேர்தலில்

# தில்லு முல்லு செய்த ஏ.எஸ்.பி. இடமாற்றம்

## ஆனால் அவர் அதை ஏற்க மறுப்பு

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி கிழக்கு மாகாணத்தில் நடத்தப்பட்ட உள்ளூராட்சி தேர்தலின் போது தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட உதவிப் பொலிஸ் அதிபர், மட்டக்களப்பு மாவட்டம்— ஏறாவூரில் இருந்து இடமாற்றம்செய்யப்பட்டார்.

ஏறாவூரில் இடம்பெற்ற தேர்தல் முறைகேடுகள் தொடர்பாக தேர்தல் திணைக்களமும் இரகசியப் பொலிஸ் திணைக்களமும் நடத்திய விசாரணைகளை அடுத்து இவர் இடமாற்றம் செய்யப்பட்டார்.

சம்பந்தப்பட்ட உதவிப் பொலிஸ் அதிபர் இவ்விடமாற்ற உத்தரவை புறக்கணித்து விட்டார் என்றும் மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ—எ)

---

உ

ஓம் சக்தி

கோப்பாய் மத்தி

# அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் அலங்கார உற்சவம்

31-07-1994 தொடக்கம் 09 08-1994 வரை 10 நாள் நாவலடி சனசமூக நிலைய வாலிபர் சங்க அனுசரணையுடன்

## தெய்வீகப் பேருரை

தினமும் மாலை 7-00மணி — 8-00மணிவரைக்கும்

பொருள்:

''விநாயக புராணம்''

நிகழ்த்துபவர்:

"செஞ்சொற் செல்வன்"

இணுவையூர்

ஆறு. திருமுருகன். B. A. அவர்கள்

(ஆசிரியர் யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)

அனைவரும் வருக, திருவருள் பெறுக, அம்மன் அருள் பெறுக!

பரிபாலன சபை,

விளம்பர அன்பளிப்பு:

முத்துமாரி அன்பன்

(32139) கோப்பாய் மத்தி.

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 10 — 01 — 1929



மறைவு: 30 — 06 — 1994

## அமரர் பொன்னையா அன்னப்பிள்ளை

அன்பும் பாசமும் கொண்ட அம்மா! நீங்கள் அன்பின் சிகரமாய், பாசத்தின்பிறப்பிடமாய், எல்லோருக்கும் அன்பாய் வாழ்ந்த அன்புத் தலைவி அம்மா! நீங்கள் எங்கள் குடும்பத்தின் வழிகாட்டி; நீங்கள் எங்கள் அனைவரையும் விட்டுப்பிரிந்து ஒரு மாதமானாலும் உங்கள் உருவமும் நினைவும் எங்கள் மனதை விட்டு எப்போதும் நீங்காது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக இன்று [30 — 07 1994] சனிக்கிழமை நடைபெறும் மதிய போசனத்திலும் வீட்டுக் கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்;

அன்புக் கணவர்,

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

வி. எச். லேன்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை இயற்கை வளங்கள், சக்தி, விஞ்ஞான அதிகார சபையின் ஆராய்ச்சித் தொடையொன்றின் கீழ் மனநோய் மருத்துவத் துறையில் தற்காலிக ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1994 ஆகஸ்ட் 30ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன... எள்ளார் பெற்றுக் கொள்ளப்படும்.

தேவைகள்:

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் முதலாம் வகுப்புப் பட்டம் மிகவும் விரும்பத்தக்கது. ஆராய்ச்சிப் பணியைச் செய்யவும் மக்களுக்கு உதவவதற்கும் உயர்ந்த செயலூக்கம் உடையவராய் இருத்தல் வேண்டும். இரண்டு ஆண்டுகள் பணியாற்றுவதாக உறுதியளித்தல் வேண்டும்.

சம்பளம்:

ஆராய்ச்சி உதவியாளர்:
(முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு பட்டத்துடன்) 4,500/- ரூபா மாதமொன்றுக்கு

ஆராய்ச்சி உதவியாளர்;
(சாதாரண பட்டத்துடன்) 4,300/- ரூபா மாதமொன்றுக்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும், விபரங்களையும் பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரையொட்டப்பட்ட 23x10 ச. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந்தந்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994-07-21.

---

## வேலைநிறுத்தத்தால்

# பல்கலைக்கழக அலுவல் ஸ்தம்பிதம்

கொழும்பு, ஜூலை 30 பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தத்தினால் அனைத்து பல்கலைக்கழகங்களின் நடவடிக்கைகளும் முற்றாக ஸ்தம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 20 ஆயிரம் ஊழியர்கள் தங்களுக்கு ஓய்வூதியத்திட்டம் கொண்டுவரப்படவேண்டும் என்று கோரி வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர். (இ-எ-6)

## ஆய்வு மூலம் கண்டுபிடிப்பு:

# 69 வீத மாணவருக்கு போசாக்கு குறைபாடு!

யாழ்ப்பாணம், ஜூலை 30 யாழ். மாநகராட்சி மன்ற பகுதியிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் இடையே அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வின்போது 69 வீதமான மாணவர்கள் ஏதாவது ஒரு போசாக்கு குறைபாட்டினால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால், 46 பாடசாலைகளில், கடந்த 6 மாதங்களில், 4 ஆயிரத்து 870 மாணவர்கள் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

இவர்களில் 3 ஆயிரத்து 341 மாணவர்கள் ஏதாவது ஒரு போசாக்கு குறைபாட்டு நோயினால் பீடிக்கப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் உயிர்ச்சத்து ஏ, பி, சி குறைபாடுடையவர்களாகவும், வயதிற்கேற்ற நிறை உயரம் காணப்படாதவர்களாகவும், உளத்தாக்கங்களினால் முன்னேற்றம் தடைப்பட்ட நிலையிலும் காணப்பட்டனர். (ஒ-4)

---

புங்குடுதீவு-நயினாதீவு ப. நோ. கூ. சங்கம் (வ-து)

புங்குடுதீவு- நயினாதீவு ப. நோ. கூ. சங்க அங்கத்தவர்கள், கிளைக்குழு உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், பணியாளர்களுக்கான

# கலந்துரையாடல் 30-07-1994

தமிழீழ நிர்வாக சேவைப் பகுதியினரால் 30-07-94ஆம் திகதி நடக்கப்படவிருந்த மேற்படி கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதற்கான திகதியை பின்னர் அறியத்தருகின்றோம்.

தலைவர்/செயலாளர்,

புங்/நயி ப. நோ. கூ. சங்கம்
101/1, 3ஆம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம்; (இ/8807)

---

# சேவைநலம் பாராட்டு விழா



## திரு. வேலுப்பிள்ளை அமிர்தலிங்கம்

(உப அதிபர்)

கரணவாய் வடமேற்கைச் சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை அமிர்தலிங்கம் (உப அதிபர்) அவர்கள் 07-08-94இல் தனது அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்து தனது 40வருட ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார். இவரின் சேவையைப் பாராட்டி

யா/கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் வித்தியாலயத்தினர் இன்று விழா எடுக்கின்றோம்.

இவர் யா/தேவரையாளி இந்துக் கல்லூரியில் ஆசிரிய சேவையை ஆரம்பித்து, கண்டி புசல்லாவ சரஸ்வதி வித்தியாலயம், கண்டாவளை அரசினர் வித்தியாலயம் ஆகியவற்றில் கடமையாற்றி, தனது ஆசிரிய சேவையின் இறுதிப் 18 வருடங்களையும் தான் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக்கொண்ட கொற்றாவத்தை வித்தியாலயத்தில் தொடர்ந்து அதன் இன்றைய வளர்ச்சியில் முக்கிய பங்கெடுத்துள்ளார். சிறந்த ஆங்கில ஆசிரியராகவும் சாரணியராகவும், பலர் போற்றும் சமூகசேவையாளராகவும் விளங்கும் இவரை

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய நாம் பலஆண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

(இ/8804)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Prima கோழித்தீன், கால் நடை மருந்துகள் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (32146)

Broiler இறைச்சிக் கோழிகள் தினமும் காலை 7-00 மணி தொடக்கம் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வசதிக்காக எங்கள் பெயர்ப்பலகை வாசலில் உண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (32148)

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள், பட்டம், வான் கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். (32147)

பெரிய கட்டிலுக்குரிய "ஆர்ப்பிகோ" குசன் மெத்தை விற்பனைக்கு உண்டு. சி. நாதன், இல. 16/3, விதானையார் வீதி, சுண்டிக்குளி யாழ்ப்பாணம். (32143)

நல்ல நிலையிலுள்ள (F)போட் கோட்டினா கார், பைனியர் ஸ்ரீறியோ செற், ஆங்கில தட்டச்சு, சீக்கோ சுவர்க்கடிகாரம் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல: 37/1, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். (32142)

நல்ல நிலையிலுள்ள Iapan Dental Chair. Foot - Drill விற்பனைக்குண்டு. தொடர்பு: Dr. Sabaratnam, மூளாய் வீதி (மாவடிச் சந்தி), வட்டுக்கோட்டை. (7550)

## நாய்க்குட்டிகள் விற்பனை

அழகிய பொமரேனியன் ஆண், பெண் நாய்க் குட்டிகள் ஒரு மாத வயதுடையவை விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 9, மூன்றாம் குறுக்குத் தெரு, (அடைக்கல மாதா கோயில் பக்கமாக), யாழ்ப்பாணம். (32141)

நல்ல இன அழகிய பொமரேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்வி எம். சரண்ஜா, இல. 48/1, முதலாம் ஒழுங்கை ஐங்கரன் விளையாட்டுக் கழக ஒழுங்கை), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-8805)

## பராமரிப்பாளர் தேவை

செல்வச்சந்நிதி அடியார் மடத்துக்குப் பராமரிப்பாளர் தேவை. ஐம்பது வயதுக்கு மேற்பட்ட கணவன், மனைவியோ, தனியாளோ காலை 9-00 மணியின் மேல் நேரில் வரவும். ம. வெங்கடாசல பிள்ளை, நிர்வாகி, அடியார் மடம், செல்வச்சந்நிதி, தொண்டமனாறு. (32140)

## மணிக்கூடுகள் திருத்துதல்

சகல மணிக்கூடுகள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ளலாம். டில்கா வார்ச் அன்ட் றேடியோ வேர்க்ஸ், ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை, கண்டி வீதி, சாவகச்சேரி, தலைமையகம் 284, வானவில் அருகில் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-8299)

## ஆண்டு - 3 4, 5,

ஆண்டு 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்கள் 31-7-94, 2-8-94 திகதிகளில் வெளியிடப்படும். ஆண்டு 3, ஆண்டு 4, வினாத்தாள் 30-7-94 வெளியிடப்படும். பெறவிரும்புவோர் தொடர்பு கொள்ளவும். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (32129)

## தேவை

பிளவுஸ், ஸ்கேட், Fபுறக், பஞ்சாபி ஜீன்ஸ் முதலிய பெண்களுக்குரிய உடுப்புகள், வெட்டி தைக்கக்கூடிய அனுபவமுள்ள பெண்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். இல. 942, மே/பா உதயன். (7554)

## ஆனந்தம் சீயாக்காய்

எமது உடம்புக்கு சிரசே பிரதானம். ஆகவே சித்த மருத்துவ முறைப்படி தயாரிக்கப்பெற்ற ஆனந்தம் சீயாக்காய் பவுடர் என்று கேட்டு வாங்கி பயன்பெறவும் மொத்தமாக கிடைக்குமிடங்கள்: ராஜபாலன் றேடர்ஸ் சுன்னாகம், கனகா பத்திரிகை நிலையம் திருநெல்வேலி, அம்பிகை களஞ்சியம் யாழ்ப்பாணம். பவானி களஞ்சியம் நீர்வேலி, மு. சச்சிதானந்தர் பருத்தித்துறை. (7487)

## சுகாதார கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 30 யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார ஊழியர்கள், தொண்டர்களுக்கான சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று, இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

அனைத்துலக குடும்ப ஆண்டை முன்னிட்டு குடும்பத்தில் எழும் சுகாதாரப் பிரச்சினைகளை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது பற்றி இதில் கருத்துரைகள் இடம் பெறும். (ஒ-4)

## SHORT - TERM COUNSELING COURSE IN ENGLISH (Week - End)

The Course begins on Saturday October 1, 1994 At THODARPAHAM, 657/1, Hospital Road, Jaffna.

The last date to receive application is on August 31, 1994

Please get your applications at Thodarpaham on the following days;

Monday, Wednesday, Friday and Sunday from 9 a.m. — 1 p.m.

A basic fee will be charged for the course.

A Working Knowledge in English is a requirement.

The number will be limited.

- DIRECTOR.

Thodarpaham,
657/1, Hospital Road,
Jaffna. [32134]

## மாதாந்த அறிவியலரங்கு

நாளை **31 - 07 - 1994** ஞாயிறு
பிற்பகல் 3 மணிக்கு

இடம்: உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்

தலைப்பு:

**அருளியல் இம்மைக்கா மறுமைக்கா?**

நிகழ்த்துபவர்:

மெஞ்ஞானவாரிதி செஞ்சொற்கொண்டல்
பிரம்மஸ்ரீ சபாரத்தின ஈஸ்வரசர்மா
அவர்கள்

அறிவுத்தேடல் மிக்கோர் வருக!

- நூலக அபிவிருத்திச்சபை.

சாவ. பிரதேசசபை பொதுநூலகம்,
உசன் மிருசுவில்.

இணைக்கரம்:

**திரு. கு. தட்சணாமூர்த்தி**
கண்டிவீதி, மிருசுவில்.

(32131)

## முக்கிய அறிவித்தல்

வலி - கிழக்கு வர்த்தகர் சங்கம்
(கோப்பாய் வட்டம்)

### வருடாந்தப் பொதுக்கூட்டம் பிற்போடல்

இன்று 30 - 07 - 1994 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த மேற்படி பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணமாக பிற்போடப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படுமென்பதை அறியத்தருகின்றோம்.

த. பரராசசிங்கம்,
தலைவர்.

அ. நாகேஸ்வரன்,
செயலாளர்.

(32136)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் தற்பரானந்தன் முருகேசன்

(யூனியன் கல்லூரிப் பழைய மாணவனும்
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவனும்,)
(தெல்லிப்பளை)

பிறப்பு: 11 — 08 — 1973
இறப்பு: 30 — 07 — 1993

இறையடி நீழலில் இன்புற்றிருக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கும்;

அப்பா, அம்மா
தம்பிமார்:

வட்டு. தென் மேற்கு,
வட்டுக்கோட்டை.

(32091)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வ. செல்லத்துரை**

தோற்றம்: 14 — 07 — 1916



திருமதி
**இந்திரா குகப்பிரகாசம்**

17 — 06 — 1947



திருமதி
**நல்லம்மா விஸ்வநாதன்**

06 — 08 — 1941

மறைவு: **10 — 08 — 1993**

**திதி: 30 - 07 - 1994 சனிக்கிழமை (அட்டமி)**

எண்ணங்கள் ஆயிரம் சுமந்து சென்றீர்
எம் இதயங்கள் ஒடிந்திட நொடிப் பொழுதில்
கண்ணற்ற காலனின் பிடியில் சிக்கி
ஒன்றாய் தனிமையில் மறைந்தீர் கடல்தனிலே
துயரக் கடல் தனில் எமை ஆழ்த்தி விட்டீர்
உங்கள் சாந்தியை நாடி என்றும் வேண்டுதல் செய்வோம்

உங்கள் அழியா நினைவுகளால் துயருறும்:

க. சண்முகநாதன், பிள்ளைகள்,
க. விஸ்வநாதன், பிள்ளைகள்,
க. குகப்பிரகாசம், பிள்ளைகள்,
திருமதி பரஞ்சோதி செல்லத்துரை, பிள்ளைகள்.

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.

[32125]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## வெட்கம்! வெட்கம்!

வடபகுதியில் உள்ள ஆஸ்பத்திரிகளில், ஐக்கிய நாடுகள் தொண்டர் டாக்டர்கள் பணிபுரிய அமர்த்தப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான ஆரம்பக் கட்ட ஒழுங்குகள் நடைபெறுகின்றன.

இப்பகுதியில் டாக்டர்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுகிறது. அதனால் நோயாளர்களுக்கு உரிய வைத்திய சேவை கிடைக்க முடிவதில்லை. இந்தக் கஷ்ட நிலையைப் போக்கும் ஓர் அவசர நடவடிக்கையாகவே, ஐக்கிய நாடுகள் தொண்டர் பிரிவு தொண்டர் டாக்டர்களின் சேவையை நல்க முன்வந்திருக்கிறது.

இந்த உதவி காலத்தால் செய்த பெருதவியாக கருதப்படவேண்டியதாகும். தேவையான நேரத்தில், உரிய சந்தர்ப்பம் அறிந்து கிடைக்கும் உதவி மதிப்பிடற்கரியது.

வடபகுதி, குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாடு திறமையுள்ள டாக்டர்களின் பிறப்பிடமாக விளங்குவது. பல வருடங்களுக்கு முன்னரே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் தென்னிலங்கையிலும், வெளிநாடுகளிலும் திறமையுள்ள டாக்டர்களாக சிறப்பாகப் பணிபுரிந்திருக்கிறார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தோன்றிய பின்னர் உள்ளூரிலேயே வருடாந்தம் சராசரி ஐம்பது டாக்டர்கள் உருவாக்கப்படுகிறார்கள் — பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

அவ்வாறிருந்தும் வடபகுதி ஆஸ்பத்திரிகளில் டாக்டர்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுவது துரதிர்ஷ்டமானதாகும்.

இப்பகுதியில் பணிபுரிந்த அனுபவமும் திறமையும் உள்ள மூத்த டாக்டர்கள் பலர் வெளிநாடுகளுக்குப் பறந்துவிட்டனர். தென்னிலங்கையில் பணிபுரியும் தமிழ் டாக்டர்கள் இங்கு வந்து சேவையாற்றுவதற்கு விரும்புவதில்லை; இடமாற்றம் பெற்றவர் பின் நிற்கிறார்கள்.

ஏன்? யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கற்று, யாழ். போதனா வைத்தியசாலையில் பயிற்சி பெற்ற இளம் டாக்டர்களே வடபகுதி ஆஸ்பத்திரிகளில் பணிபுரிய விரும்புகிறார்கள் இல்லை.

இந்தப் புதிய டாக்டர்கள் தமிழ் இளைஞர்கள். எனினும் தமது சொந்த மக்களுக்குச் சேவை செய்ய விரும்பாமல் கொழும்புக்குச் சென்றுவிடுகிறார்கள். வடபகுதி ஆஸ்பத்திரிகளுக்கு நியமிக்கப்பட்டால், மனித உரிமை மீறல் வழக்குத் தொடரவும் முனைகிறார்கள்.

தாங்கள் பிறந்த மண். அந்த மண்ணின் மக்களுக்கு முதலில் சேவை செய்தே அடுத்த வசதிகள் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்ற எண்ணம் மன உணர்வு இவர்களிடம் இல்லை. இது பெரும் வெட்கக்கேடான நிலைமையாகும்.

தமிழ்ப் பகுதிகளில் வாழும் மக்களின் வரிப்பணத்திலேயே தாம் இலவசமாகப் பயின்று டாக்டர்களாக வர முடிந்தது என்பதனைக் கூட அவர்கள் மறந்து விடுகிறார்கள். அந்த மக்களுக்குச் சேவை புரிய வேண்டிய கடப்பாடு தமக்கு உண்டு என்பதனையும் எண்ணுகிறார்கள் இல்லை.

இத்தகைய அவலம் இல்லாது இங்கேயே — தம் சொந்த மண்ணிலேயே — நின்று பணிபுரியும் இளம் டாக்டர்களும், வெளியே சென்று வசதிகளுடன் வாழ வாய்ப்புகள் இருந்தும், தங்கள் தாய் மண்ணில் கால் பதித்து நின்று, சொந்த மக்களுக்குப் பணிபுரியும் மூத்த டாக்டர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இந்த மண்ணைச் சேர்ந்த திறமைசாலிகளும், துறைசார் நிபுணர்களும் இவ்வாறு ஓடிவிட்டால், இங்கே வாழும் மக்களுக்குச் சேவை செய்வது யார்? இந்த மண்ணை வளம் படுத்துவது யார்? இந்த ஆபத்தான நிலையை நீக்க தொண்டர் சேவை மட்டுமே உதவும்?

எங்கள் மக்களின் தேவைகளை நிறைவேற்ற வெளியார் உதவியையே நாடிக் கொண்டிருக்கப் போகிறோமா? தமிழர்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்க முடியாதவர்கள் என்றால் அவர்கள் சுதந்திரத்துக்குப் போராடி என்ன பயன்...?

# பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பதாக நான் உறுதி கூறமாட்டேன்!

## டி. பி. விடுத்த செய்தி இது

கொழும்பு, ஜூலை 30

பிரச்சினைகளை உடனடியாகத் தீர்ப்பேன் என்று உறுதிகூறமாட்டேன். அச்சம், தேவை ஆகியவற்றில் இருந்து விடுதலை பெற்ற சமுதாயத்தை உருவாக்கும் முயற்சிக்கு மீண்டும் எம்மை அர்ப்பணிப்போம் என்ற உறுதியை மட்டுமே நான் அளிக்கின்றேன்.

இவ்வாறு ஜனாதிபதி விஜேதுங்க விடுத்த செய்தி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் கடந்த செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. அதனையொட்டி விடுத்த செய்தி ஒன்றிலேயே ஜனாதிபதி முன்கண்ட கருத்தை வெளியிட்டார்.

''எதிர்வரும் பொதுத் தேர்தலில் மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றியீட்டி அரசு அமைத்தால் அதிசயங்களை செய்வேன் என்று நான் உறுதியளிக்கமாட்டேன்'' — என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தற்போதைய அரசின் பொருளாதார மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல, ஐக்கிய தேசியக்கட்சி எம். பிக்களை அதிக எண்ணிக்கையில் நாடாளுமன்றத்துக்கு மக்கள் அனுப்பிவைக்கவேண்டும் என்றும் அவர் தமது செய்தியில் கேட்டுக்கொண்டார். (ஒ-எ)

## எதிரணி ஆட்சிக்கு வந்தால் புதிய அமைச்சர்கள் யார்?

### கொழும்பில் பலவாறு ஊகம்

கொழும்பு, ஜூலை 30

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டி அரசு அமைக்கும் பட்சத்தில் யார் யார் அமைச்சர் பதவியைப் பெறுபவர் என்பது பற்றி கொழும்பில் பலவாறு ஊகம் வெளியிடப்பட்டுள்ளது.

அமைச்சர்களாகும் வாய்ப்புள்ளவர்கள் விவரம் வருமாறு:

பாதுகாப்பு அமைச்சர்: ஜெனரல் அனுருத்த ரத்வத்தை. நிதி அமைச்சர்: பேராசிரியர் பீரிஸ். கிராமியக் கைத்தொழில் துறை: தர்மசிறி சேனநாயக்க. வெளியுறவு அமைச்சர்: லக்ஷ்மன் ஜெயக்கொடி.

பிரதேச அபிவிருத்தி: அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ. நீதி அமைச்சர்: நிமல் சிறிபால டிசில்வா. வீடமைப்பு: ஜனாப் ஏ. எச். எம். பௌஸி.

பிரதமர் பதவியுடன் தமக்கு விருப்பமான விவசாய அபிவிருத்தி, மகாவலி அல்லது கல்வி மற்றும் இளைஞர் விவகாரம் ஆகிய அமைச்சுகளில் ஒன்றையும் சந்திரிகா வைத்திருப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## பொ. ஐ. முன்னணி ஆதரவாளர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜூலை 30

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவாளரான கே. திலகரத்னா என்பவர் அநுராதபுரம் பழைய நகரில் கடந்த புதன் இரவு 11 மணியளவில் எதிரணியைச் சேர்ந்த சிலரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

இக்கொலை தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ-6)

## 'ரணஹண்ட' ராணுவ நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 30

அம்பாறை மாவட்டம், சஞ்சிகுடிச்ச ஆறு என்னும் இடத்தில் 'ரணஹண்ட' என்ற பெயரில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-ஏ)

## வீதி விளக்குகள் ஐந்நூறு!

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். மாநகரசபைப் பகுதியில் இதுவரை மொத்தம் ஐந்நூறு வீதி விளக்குகள் பொருத்தி முடிக்கப்பட்டுள்ளன.

ஆயிரம் வீதி விளக்குகளை அமைக்கும் திட்டத்தின் முதற்கட்டம் தற்போது பூர்த்தியாகியுள்ளதாக யாழ் மாநகரசபை மின்பொறியியலாளர் திரு. வே. நவரத்தினராசா தெரிவித்தார். (ஐ-17)

## மாட்டு வண்டி சவாரிப் போட்டி

தென்மராட்சி, ஜூலை 30

எழுதுமட்டுவாழ் ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தினர் கொடிகாமம் வட்டப் பிரிவினரான இரட்டை மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியினை நாளை ஞாயிறு பிற்பகல் 3-00 மணிக்கு எழுதுமட்டுவாழ் தரவை மைதானத்தில் நடத்தவுள்ளனர். (ஒ-117)

## புலிகளின் குரல் வானொலியில்

30-07-1994
சனி இரவு

★ 8-01 — அறிவியல் கலசம்
★ 8-10 — நிகழ்வும் பகிர்வும்
★ 8-25 — நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — சித்திரம் ''வீர மறவர் ஆட்சி''

31-07-1994
ஞாயிறு காலை

★ 7-02 — மாவீரர் வணக்கம்
★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## சந்திரிகாவின் ஆட்சியில் நாடு 'றுவாண்டா' வாகும்

### ஐ. தே. க. அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 30

சந்திரிகா குமாரணதுங்க ஆட்சிக்கு வந்தால் இந்த நாட்டை இன்னொரு 'றுவாண்டா' வாக மாற்றிவிடுவார்.

அமைச்சர் விஜேபால மெண்டிஸ் போத்தலேயில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசிய போது முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஆகஸ்ட் 16 ஆம் திகதி ஐக்கிய தேசியக்கட்சியின் இறந்த உறுப்பினர்களின் உடல்கள் மீது இலங்கையின் மகாராணியாகத் தம்மை முடி சூட்டிக்கொள்ள சந்திரிகா திட்டமிட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-எ)

## 40 பேரை தாங்கக்கூடிய மேடை சரிந்தது ஏன்?

### இரகசியப் பொலிஸார் குழப்பம்!

கொழும்பு, ஜூலை 30

நாற்பது பேரைத் தாங்கக்கூடியதாகக் கட்டப்பட்டுள்ளது என பொறியியலாளர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கொலன்னே ஐ. தே. க. பிரசார மேடை சொற்ப எண்ணிக்கையானவர்களை தாங்கமுடியாது சரிந்து விழுந்தது ஏன்?

அச் சம்பவம் குறித்து விசாரணை நடத்திவரும் இரகசியப் பொலிஸாரை இக் கேள்வி குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

விசாரணை அறிக்கை பொலிஸார் இவ் வாரம் பொலிஸ்மா அதிபரிடம் சமர்ப்பிக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம் மேடை அமைக்கப்படுவதை மேற்பார்வை செய்த பொறியியலாளர் இத் துறையில் 30 ஆண்டுகால அனுபவமிக்கவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## ஆக. 16இல் அரசியல் சூறாவளி:

## ஐ. தே. க. கப்பல் கப்டன் மாலுமிகளுடன் மூழ்கும்!

### இப்படிக் கூறுகிறார் சந்திரிகா

கொழும்பு, ஜூலை 30

நாட்டைப் பிரிப்பதற்கு சுதந்திரக் கட்சியோ, பொதுமக்கள் ஐக்கிய முன்னணியோ எவருடனும் உடன்படிக்கை செய்து கொள்ளவில்லை என்று முதலமைச்சர் சந்திரிகா தெரிவித்திருக்கிறார்.

பாணந்துறையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆகஸ்ட் 16 இல் அரசியல் சூறாவளி ஒன்று வீச விருக்கிறது. அதன் பலனாக ஐக்கிய தேசியக்கட்சி என்ற கப்பல் கப்டன், மாலுமிகளுடன் மூழ்கிவிடும் என்றும் அவர் கூறினார். (ஒ-எ)

## நல்லூருக்கு மின்சாரம்

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் உற்சவ காலத்தின் போது ஆலய சுற்றாடல் பகுதிக்கு யாழ். மாநகராட்சி மன்றத்தின் ஜெனரேற்றர் மூலம் இம்முறையும் மின்சாரம் வழங்கப்படும் என மின்சாரப் பொறியியலாளர் திரு. வே. நவரத்தினராசா தெரிவித்தார்.

மாலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை மின்சாரம் வழங்கப்படும் எனவும், அதிகாலையில் வரும் பக்தர்களின் நன்மை கருதி ஆலய சுற்றாடல் பகுதியில் தற்காலிகமாக அமைக்கப்படும் வீதி விளக்குகள் அதிகாலை 3 மணி தொடக்கம் 6 மணி வரை கொளுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-17)

# ஆட்களைகொல்லும் உத்திகளை ஐ.தே.கவுக்கு சு கவே படிப்பித்தது

## ஜனாதிபதி டி.பி. அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

ஆட்களைக் கொல்லும் உத்திகளை 1970 முதல் 1977 வரை பதவியில் இருந்த சுதந்திரக்கட்சி அரசுதான் ஐக்கிய தேசியக்கட்சிக்கு படிப்பித்தது.

ஜனாதிபதி விஜேதுங்க நிவித்திகலையில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு கூறினார்.

1971 இல் இடம்பெற்ற கிளர்ச்சியின்போது நூற்றுக்கணக்கானோரைக் கொன்றது சுதந்திரக்கட்சிதான். பொறுப்பாக இருந்தது. மக்களை எப்படிக் கொல்வது என்பதை சு. க. தான் எமக்குச் சொல்லிக்கொடுத்தது. இப்போது ஆட்களைக் கொல்வதாக அக்கட்சி ஐ. தே. க மீது குற்றஞ்சுமத்துகிறது — என்றும் அவர் கூறினார்.

நாட்டைப் பிரிக்க பொதுமக்கள் ஐக்கிய முன்னணி திட்டமிட்டுள்ளது என்றும் அவர் கூறினார். [illegible] ஐ. தே. க. அரசு [illegible] தெரிவித்தார். (உ-எ)

## அமைச்சரின் 'பிக்அப்'பில் வாகன இலக்கத் தகடுகள்!

கொழும்பு, ஜூலை 30

அநுராதபுரம் நகரில் அம்மாவட்டத்தைச் சேர்ந்த முக்கிய அமைச்சர் ஒருவருக்குச் சொந்தமான 'பிக்அப்' வாகனம் ஒன்றில் இருந்து பல வாகன இலக்கத் தகடுகள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

அநுராதபுரம் நகரில் பொலீஸார் வாகனங்களைச் சோதனையிட்ட போது, இச் சம்பவம் இடம்பெற்றது.

வாகனத்தகடுகள் வைக்கப்பட்டிருந்த 'பிக்அப்' வாகனமும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ-6)

## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 30

புத்தூர் மேற்கு கலைமதி சனசமூக நிலையத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழா, நிலைய மைதானத்தில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறும்.

''சமூக முன்னேற்றத்திற்கு உதவுவது கல்வியா, செல்வமா?'' என்ற தலைப்பில் பட்டிமன்றம், சனசமூக நிலைய சிறுவர் நடனம், நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஒ)

## பாடசாலைகளில்

நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையின் வைரவிழா முன்னோட்ட அரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை கவிஞர் கடிவெள்ளி அரங்கில் நடைபெறும்.

பழைய மாணவர் சங்கம் நடத்தும் அரங்கில் சிறப்புரைகள், கருத்தரங்கு, கவியரங்கு, இசையரங்கு ஆகியன இடம்பெறும். (க-111)

## இளங்கலைஞர் மன்ற இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூலை 30

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்த இசை நிகழ்ச்சி மன்றக் கலா மண்டபத்தில் இன்று (சனி) மாலை 5 மணி முதல் நடைபெறவுள்ளது. வாகீச கலாநிதி கனக சபாபதி நாகேஸ்வரன் நிகழ்ச்சிக்கு தலைமை வகிப்பார்.

சிறப்புநிகழ்ச்சிகளாக செல்வி மைதிலி அம்பலவாணரின் மாணவிகளின் பரத நாட்டியமும் கலைவாணி பாட்டுக் கழக ஆதரவில் திரு சி. தனபால சிங்கத்தின் ''மரணத்தை வென்றவர்கள்'' இசைவடிவ நாடகமும் இடம்பெறும். (ஐ-111-17)

## பாதிப்புற்றோருக்கு உதவ வெளிநாட்டில் இருந்து உதவி

### யாழ். லயன்ஸ் கழகம் முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 30

இடம்பெயர்ந்தோர் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்திசெய்ய தேவைப்படும் நிதியை மக்கள் மத்தியில் இருந்து பல வழிகளிலும் திரட்டும் முறையைக் கைவிட்டு, வெளிநாடுகளில் இருந்தும், வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து திரட்டி அத்தியாவசிய திட்டங்களைச் செயற்படுத்துவது என்று யாழ். லயன்ஸ் கழகத்தினர் தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளனர்.

யாழ். லயன்ஸ் கழகத்தின் புதிய தலைவர் திரு ஏ. ஜெயவீரசிங்கம் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடந்த கழகத்தின் புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவுக் கூட்டத்திலே முன்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

## பொ. ஐ. மு. அரசில்

## நாட்டின் பஸ் சேவைகள் மீண்டும் தேசியமயமாகும்

### அனில் முனசிங்கா அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியைப் பிடித்தும் இலங்கைப் போக்குவரத்துச் சபையை மீண்டும் நிறுவும். மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ் டிப்போக்களை இ. போ. ச மீண்டும் பொறுப்பேற்கும்.

பொ. ஐ. மு. வேட்பாளரும் சுதந்திரக் கட்சி அரசில் போக்குவரத்து அமைச்சராகப் பதவி வகித்தவருமான அனில் முனசிங்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் பஸ் சேவைகள் மீண்டும் தேசிய மயப்படுத்தப்படும் என்றும் அவர் அகலவத்தையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார். [எ]

## வானொலி, தொலைக்காட்சி பிரசாரம்:

## கட்சிப் பெயரை குறிப்பிட்டு குறை ஏதும் கூற முடியாது

### தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

வானொலியிலோ அல்லது தொலைக்காட்சியிலோ தேர்தல் பிரசாரஞ் செய்யும் அரசியல் கட்சிகள் எதிரணிக் கட்சிகளை பெயர் கூறி தாக்கவோ, குறைகூறவோ கூடாது.

இவ்வாறு தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீசில்வா தெரிவித்திருக்கிறார்.

அரசியல் கட்சியின் கொள்கையைப் பற்றி கூறும் போது அக்கட்சி எது என்பதை அடையாளம் காட்ட மட்டுமே அக்கட்சியின் பெயரை எதிரணிக் கட்சிகள் தங்கள் பிரசாரப் பேச்சில் குறிப்பிடலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் ரூபவாஹினியில் ஐ. தே. க சார்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் விஜேசேகரா பிரசார உரை நிகழ்த்திய போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பெயரைக் கூறி கண்டித்திருந்தார். அவ்வாறு கூறுவது தேர்தல் சட்டத்தை மீறிய செயல் என்று சு. க பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா ஆட்சேபித்து இருந்தார்.

இது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே ஆணையாளர் முன்கண்ட நிலைப்பாட்டைத் தெரிவித்தார். (ஒ-எ)

## மாநகராட்சி மன்றப் பகுதியில்

## குடிதண்ணீர் விநியோகம்; விஸ்தரிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ் மாநகராட்சி மன்றம் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை விஸ்தரிக்கவுள்ளது.

இதற்கென கொழும்பில் இருந்து 7 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த குடிதண்ணீர் விநியோகத்திற்கான உபகரணங்கள் கப்பல் மூலம் எடுத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு கொழும்பில் இருந்து யாழ் திரும்பிய யாழ் மாநகர பொறியியலாளர் திரு. தவராஜா தெரிவித்தார்.

நான்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள், எஸ்லோன் குழாய்கள், பைப்புகள் மற்றும் பல உபகரணங்கள் எடுத்துவரப்படவுள்ளன.

இவை வந்து சேர்ந்ததும் யாழ். மாநகரசபை மன்றத்துக்கு உட்பட்ட பகுதிகளில் குடிதண்ணீர் திட்டத்தை சீராக விநியோகிக்க முடியும் என்று திரு தவராஜா மேலும் தெரிவித்தார். (ஒ 17)

## தெற்கில் இசை குழுக்களுக்கு ஏற்பட்டுள்ள கிராக்கி!

கொழும்பு, ஜூலை 30

தென்பகுதித் தேர்தல் பிரசாரத்தில் இசைக்குழுக்களுக்கு பலத்த கிராக்கி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு அரசியல் கட்சியும் தங்களின் பிரசாரக் கூட்டங்களுக்கு பெரும் எண்ணிக்கையில் மக்களை திரட்டும் ஒரு நடவடிக்கையாக, பிரசாரக்கூட்டத்தின் முடிவில் இசை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து வருகிறது.

இதன் காரணமாக தென்பகுதி தேர்தல் பிரசாரங்களில் இசைக்குழுக்கள் தனி இடம் பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே தென் இலங்கையின் இசைக்குழுக்களின் 'காட்டில் நல்ல மழை' பெய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## மணிவிழா ஞாபகார்த்த பரிசில்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 30

சொக்கன் மணிவிழா ஞாபகார்த்தக் கல்வி வளர்ச்சிப் பரிசில் வழங்கும் வைபவம் இன்று நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் நடைபெறும்.

ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சையிலும், ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையிலும் சிறப்பாகச் சித்தியடைந்தோருக்கு விழாவில் கல்வி வளர்ச்சிப் பரிசில்கள் வழங்கப்படும்.

விழாவில் முதறிஞர் சொக்கன் பிரதம விருந்தினராகக் கலந்து பரிசில்களை வழங்குவார். (அ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகம் 'பாரதி' கேடயத்திற்காக யாழ். மாவட்ட மட்டத்தில் நடத்தி வரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் (செற்றப்) இன்று நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் வி. க. அணி மோதும். (ஐ)

★ ★ ★

யாழ். ஆஸ்பத்திரி விளையாட்டு அணியினருக்கும் தெல்லிப்பழை ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியினருக்கும் இடையிலான ஒரு நாள் மென்பந்து கிரிக்கெட் போட்டி நாளை (ஞாயிறு) முற்பகல் 9 மணிமுதல் யாழ். ஓ. எல். ஆர். விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஐ 15)

★ ★ ★

யாழ். மத்திய கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தவுள்ள 6 பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி இன்று காலை 8 30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

கல்லூரி அதிபர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை, பழைய மாணவர் சங்கத் தலைவர் டாக்டர் எஸ். பி. ஆர். சிர்மாறன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டு போட்டியை ஆரம்பித்து வைப்பார்கள். (ஐ)

## ''புதிய உலகம்'' கிறிஸ்தவ நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூலை 30

இலங்கை வானொலியில் நாளை ஞாயிறு இரவு 7 மணிக்கு ''புதிய உலகம்'' கத்தோலிக்க நிகழ்ச்சி ஒலிபரப்பாக உள்ளது.

இந் நிகழ்ச்சியில் திருச்சபைச் செய்திகளும், கிறிஸ்தவ கீதங்களும் இடம்பெறும்.

## முழங்கும் முரசு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை, 30

இன்றும், நாளையும் நடைபெறவிருந்த வேல் ஆனந்தன் குழுவினரின் நாட்டிய நாடகமாகிய ''முழங்கும் முரசு'' எதிர்பாராத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 8 ஆம் திகதி யாழ். இந்துக்கல்லூரியிலும் — எதிர்வரும் 6 ஆம் திகதி யாழ் புனித மரியாள் வித்தியாலயத்திலும் — இது நடைபெறும். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ.

சுன்னாகம்

## ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான ஆடிப்பூர மகோற்சவ விழா

மங்களமிகு பவ வருடம் ஆடிமாதம் 15 ஆம் நாள் 31 - 07 - 1994 ஞாயிறு முதல் பத்துத் தினங்கள் வழமைபோல் நடைபெற அருள் பாலித்துள்ளது.

தினமும் இரவு 7 மணி முதல் 8 மணிவரை

"அருள்மொழி அரசு"

**திரு. பொன் குமாரசாமி**

அவர்களின் விசேட சொற்பொழிவு நடைபெறும்

கொடியேற்றம்

31-07-1994 ஞாயிறு காலை 9.00 மணிக்கு

சுமங்கலித் திருவிழா

6 ஆம் நாள் 05-08-1994 வெள்ளிக்கிழமை
காலை 7.00 மணிக்கு சங்காபிஷேகம்
மாலை 8.00 மணி முதல்
சதுர்விட உபசார பூசையும், சுமங்கலிப் பிரார்த்தனையும்.

தேர்விழா

9 ஆம் நாள் 08-08-1994 திங்கட்கிழமை
காலை 7.00 மணி; சங்காபிசேகம்

அன்னதானம்

மாலை 5.00 மணி; வசந்தமண்டப பூசை
மாலை 7.00 மணி;
மின் தீபங்களால் அலங்கரித்த சித்திரத் தேரில் சுவர்ணாம்பிகை உலா

தீர்த்தவாரிதி

10 ஆம் நாள் 09-08-1994 செவ்வாய்க்கிழமை
காலை 9.00 மணிக்கு
மாலை 6.00 மணிக்கு கொடியிறக்கம்

அனைவரும் வந்து தரிசித்து அன்னையின் அருள் பெறுக

தேவஸ்தானத்தினர்

சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள்,
கதிரமலைச் சிவன் தேவஸ்தானம். (7285)


## மரண அறிவித்தல்கள்

### லெப்டினன்ட் கலைஞன்

(சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி)

குணவீரசிங்கம் மதனகுமார்

(மணல் வீதி மடத்தடி மட்டுவில் தெற்கு சாவகச்சேரி)

இவர் 27-7 1994 அன்று யாழ் மாவட்டத்தில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவை தழுவிக் கொண்டார் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

மணல் வீதி,
மடத்தடி மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (32159)

ஆச்சாரியார்

### சோமு குமரேசு (காந்தியப்பு)

புங்குடுதீவு மேற்கு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது கோண்டாவில் றோட், இருபாலை கோப்பாயில் (இராமநாதன் கட்டடி) வசிப்பவருமாகிய ஆச்சாரியார் சோமு குமரேசு (காந்தியப்பா) அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், காசுப்பிள்ளை, தம்பையா, இராமலிங்கம், காலஞ்சென்றவர்களான சின்னாச்சி கற்பகம், பார்வதி, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், நடராசா, சதாசிவம், காலஞ்சென்ற தெய்வானை, செல்லாச்சி (காரைநகர்) ஆகியோரின் அருமை மைத்துனரும், கணபதிப்பிள்ளை — வசந்தனின் அன்பு மாமனாரும், தேவமணியின் அன்புத் தந்தையும், பிரகலாதன் (கல்வித் திணைக்களம்), பிரதீபன் (புங்குடுதீவு ம. ம. வித்தியாலயம்), அனுஷா (யா/இந் மகளிர் கல்லூரி), சுகந்தினி (புங்: ஸ்ரீ. சுப். ம. வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் இன்று (30-7-1994) சனிக்கிழமை காலை 10 மணிக்கு தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்!
கணபதிப்பிள்ளை வசந்தன் (மருமகன்)

கோண்டாவில் றோட்,
இருபாலை, கோப்பாய் (32151)

### திருமதி சின்னத்தம்பி சரஸ்வதி

இருபாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 124, கோவில் வீதியில் வசித்தவருமாகிய திருமதி சின்னத்தம்பி சரஸ்வதி நேற்று 29-7-94) வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் கணபதிப்பிள்ளை சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், இந்திராதேவி, லோகேஸ்வரன், செல்வராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரன், சாந்தினி, கோபிநாத் ஆகியோரின் அன்பு மாமியாரும், கிரிதரன், பகீரதன், விக்னபாலன், விசாயினி, விபூசணி, யுகன், தசன், தாரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-7-94) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணிக்கு பூதவுடல் தகனத்திற்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்!
சி. லோகேஸ்வரன் [மகன்]

124, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (22158)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 30 - 07 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### இரத்தம் தேவை

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். போதனா வைத்தியசாலையின் சகல பிரிவுகளிலும் இரத்தம் தேவைப்படுவதாகவும் -

இரத்ததானம் செய்ய விரும்புவோரை தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறும் — நோயாளர் நலன்புரிச் சங்கம் கோரி உள்ளது. (இ)

### லாம்பு தீப்பற்றி இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

எரிந்து கொண்டிருந்த அரிக்கேன் லாம்பினுள் டீசல் கலந்த மண்எண்ணெயை விட்டபோது லாம்பு குவிரெனப்பற்றி எரிந்து வெடித்துச் சிதறியது.

இச்சம்பவத்தில் இருவர் எரிந்து படுகாயமடைந்தனர்.

கொக்குவில் கிழக்கு கோணாவளையில் நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

பொன்னுத்துரை பிரபாகரன் [வயது 25] அவர் மனைவி குணாளினி [வயது 23] ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர். [இ-15]

### முருகன் பாடல்கள் ஒலிப்பதிவு நாடா வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 30

இசையமைப்பாளர் கண்ணனின் இசையில் வர்ணராமேஸ்வரன் பாடிய நல்லை முருகன் பாடல்கள் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் எதிர்வரும் 3 ஆம் திகதி புதன் பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஆ. சண்முகதாஸ் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

ஒலிப்பதிவுநாடா வெளியீட்டுரையை கலாநிதி சபா.ஜெயராசாவும் — மதிப்பீட்டுரைகளை கவிஞர் நா.க. சண்முகநாதபிள்ளை' இயலிசை வாரிதி ந. வீரமணி ஐயர், பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோரும் வழங்குவர். கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வும் சிறப்பு இசையரங்கும் அங்கு இடம்பெறும். (ஐ)

### கலைநகரில் கைகலப்பு வீடுகள் தீக்கிரை

வலிகாமம் தெற்கு, ஜூலை30

இரு நபர்களுக்கு இடையே ஏற்பட்ட வாக்குவாதம், வாள்கொண்டு தாக்குதல் நடத்தும் அளவுக்குப் பெரும் கைகலப்பாக மாறியதாகவும் —

மறுநாள் சம்பந்தப்பட்ட இரு நபர்களின் வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

கலைநகர் மாரியம்மன் கோவிலடியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

வாக்குவாதத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அளவெட்டி வாசிகள் என்று சொல்லப்படுகிறது.

வாள் வெட்டுக்காளான இருவரும் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

இது தொடர்பாக ஒருவரை சந்தேகத்தின் மீது சுன்னாகம் காவல் துறையினர் தடுத்து வைத்து விசாரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-152)

# தேர்தல் சட்ட விதிகளை மீறியதாக தொண்டமான் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 30

இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான் தேர்தல் சட்ட விதிகளை மீறி செயல்பட்டுள்ளார் என பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவளிக்கும் தோட்டத் தொழிலாளர் இணைப்புத் தொழிற் சங்கக் குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

தோட்டத் தொழிலாளர் குடியிருக்கும் லயன் அறைகளை அவர்களுக்கு சொந்தமாக்கும் உறுதிப் பத்திரங்களை தேர்தல் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், அமைச்சர் தொண்டமான் விநியோகித்து வருகின்றார். இது தேர்தல் சட்ட விதிகளை மீறும் செயல் இப்படி தொழிற்சங்க இணைப்புக் குழுவின் அமைப்பாளர் எஸ். நடேசன் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இது குறித்து எழுத்து மூலமாக தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடு அனுப்பி உள்ளதாகவும் அவர் கூறினார்.

தொழிலாளர்களை தவறான வழியில் இட்டுச் செல்லும் உறுதிமொழிகளை தொண்டமான் வழங்கி வருகிறார்- என்றும் அவர் கூறினார். (இ-எ-6)

## ப. நோ. கூ. சங்கம் நடத்தும் பஸ் சேவை

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மினி பஸ் சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

தினமும் காலை 6.15 மணிக்கு மருதங்கேணியிலிருந்து புறப்படும் இந்த பஸ் பருத்தித்துறை ஊடாக 8.40 மணிக்கு மாலிசந்தியை அடையும்—

அங்கிருந்து நவிண்டில் உடுப்பிட்டி ஊடாக யாழ்ப்பாணத்தைச் சென்றடைகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து தினமும் பிற்பகல் 3.15 மணிக்கு இதே பாதை வழியாக மருதங்கேணியை பஸ் வந்தடைகிறது. (ஜ-173)

## தனிநாடாகும் நிலையில் குயபெக் மாகாணம்

குயபெக்நகர், ஜூலை 30

கனடாவில் உள்ள பிரேஞ்சு மொழி பேசும் குயபெக் மாகாணம் தனிநாடாகத் தன்னை பிரகடனப்படுத்தும் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குயபெக் மாகாணத்தில் எதிர்வரும் செப்டெம்பர் 12 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்படவிருக்கிறது.

மாகாண நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்யும் இத்தேர்தலில் குயபெக் மாகாணத்தைத் தனிநாடாக பிரகடனப்படுத்துவதை கொள்கையாகக் கொண்ட குயபெக்கர் கள் கட்சி, கருத்துக் கணிப்பில் முன்னணியில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆட்சிக்கு வந்த ஒரு மாதத்தில் குயபெக்கை தனி சுதந்திர நாடாக்குவோம் என்று இக்கட்சி அறிவித்துள்ளது.

இப்போது குயபெக் மாகாண அரசின் நிர்வாகம் டானியல் ஜோன்சன் தலைமையிலான லிபரல் கட்சியிடம் உள்ளது. (இ-எ)

## தங்கவேலி அமைப்பதில் பிரேமதாஸா ஊழல்

### பேர்னாட் சொய்ஸா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 30

புனித போதி மரத்தைச் சுற்றி தங்கவேலி அமைப்பதில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா ஊழல் புரிந்ததாக மேல்மாகாண சபையின் அமைச்சரான பேர்னாட் சொய்ஸா குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரசுக்குச் சொந்தமான நிலங்களை விற்று அந்தப் பணத்தையும் தங்கவேலி அமைப்பதற்கு பிரேமதாஸா செலவிட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

தங்கவேலி அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட நிதி எங்கிருந்து வந்தது என்பதற்கு ஆவண சான்றுகள் எதுவும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-ஐ)

### ரயில்வே கடவை ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

ரயில்வே கடவை ஊழியர்களுக்கான மே மாத சம்பளக் கொடுப்பனவுகள் நாளை மறுதினம் திங்கள் முற்பகல் 9 மணி முதல் யாழ். செயலகத்தில் வைத்து வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ஐ)

### நால்வரில் ஒருவருக்கு எயிட்ஸ் வைரஸ்

லண்டன், ஜூலை 30

லண்டன் நகரத்தில் நாலு பேரில் ஒருவர் எய்ட்ஸ் வைரஸால் பீடிக்கப்பட்டிருப்பதாக மருத்துவ ஆய்வு அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ ஐ)

### மகாபொல வைபவம் ஒத்திவைப்பு

முதலாம் திகதி நடைபெறவிருந்த மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அறிவித்துள்ளது. (இ-ஐ)

ஐ. நா. ...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார கூட வசதியின்மை, தண்ணீர் பிரச்சினை போன்ற பல்வேறு குறைபாடுகள் குறித்து ஐ. நா. அதிகாரிகளுக்கு அங்கு விளக்கிக் கூறப்பட்டது.

ஐ. நாவின் தொண்டர் டாக்டர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டால் அவர்களுக்கான விடுதி வசதிகள் மந்திகை ஆஸ்பத்திரியில் உள்ளனவா என்பது பற்றிய விபரங்களையும் ஐ. நா. அதிகாரிகள் கேட்டறிந்தனர்.

ஆஸ்பத்திரிக்கு அருகில் அவர்களுக்கான விடுதி வசதிகளை செய்து கொடுக்க முடியும் என ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் அவர்களிடம் எடுத்துக் கூறினர்.

எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் மந்திகை ஆஸ்பத்திரிக்கு ஐ. நாவின் தொண்டர் டாக்டர்களின் சேவையை வழங்குவது சாத்தியமாகும் என அந்த அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டனர் (ஜ-173)

கட்சிக்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஹேமா உரிய நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார். அப்போது அவர் எதனை அச்சரி என்று எண்ணுகிறாரோ, அதற்காகப்போராடுவார். சரியான நேரத்தில் ஹேமா அதனைத்தான் செய்வார் என்றும் அந்த நண்பர் கூறியதாக டெய்லி நியூஸ் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காம்பிய...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல் நாட்டை வந்தடைந்தார்.

செனகல் ஏற்கனவே பதவி நீக்கம் செய்யப்பட்ட இரண்டு ஆபிரிக்க நாடுகளின் ஜனாதிபதிகளுக்கு அரசியல் தஞ்சமளித்துள்ளது.

1982 இல் பதவியை இராஜினாமாச்செய்த சமரூன் நாட்டு ஜனாதிபதி அகமது அஹிட்ஜூ, 1990 இல் பதவி கவிழ்க்கப்பட்ட சாட் நாட்டின் ஜனாதிபதி ஹிஸென ஹாப்ரே ஆகியோர் செனகலில் தஞ்சமடைந்துள்ளனர். (இ-எ)


உ.
சிவமயம்
ஆவரங்கால்

## நடராச இராமலிங்க சுவாமி கோவில்

(சிவன் கோவில்)

## ஸ்ரீபார்வதவர்த்தனி அம்மன் வருடாந்த மஹோற்சவம்

**1994**

| | | |
|---|---|---|
| 31 - 7 - 94 | பகல் 11 மணி | கொடியேற்றம் |
| 7 - 8 - 94 | மாலை 6 மணி | சப்பறம் |
| 8 - 8 - 94 | காலை 9 மணி | இரதோற்சவம் |
| 9 - 8 - 94 | காலை 9 மணி | தீர்த்தோற்சவம் |
| 10 - 8 - 94 | மாலை 6 மணி | பூங்காவனம் |

(சமய அறிவுப் போட்டி பரிசில் வழங்கல்)

சமயச் சொற்பொழிவு
வாகீச கலாநிதி

**திரு. க. நாகேஸ்வரன் M.A**

அவர்களின்

சமயச் சொற்பொழிவு 31-7-94 — 9-8-94 வரை
மாலை 6 30 முதல் 7.30 வரை நடைபெறும்

சிவன் தேவஸ்தானம்

(32160)


## நன்றி நவிலல்

27 - 7 - 94 அன்று காலமாகிய அமரர் திருமதி மயில்வாகனம் மங்கயர்க்கரசி அம்மாள் அவர்களின் மரணச்சடங்கின் போது சகல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும், வருகை தந்து அனுதாபம் தெரிவித்த (இலங்கை வங்கி ஊழியர்கள், பாரதி பதிப்பக ஊழியர்கள்) அனைவருக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும, உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

ம. நாகேந்திரம் (மகன்)
ம. சிவாநந்தம் (மகன்)
து. பாஸ்கரதேவன் (பேரன்)

143/4, பிரப்பங்குளம் ஒழுங்கை,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம். (32163)

## மரண அறிவித்தல்

திருமதி

### இராசம்மா (சரோஜா) கணபதிப்பிள்ளை

திருமதி இராசம்மா (சரோஜா) கணபதிப்பிள்ளை காலமாகிவிட்டார்.

இவர் மண்டைதீவைச் சேர்ந்தவரும், தற்பொழுது 21, விபுலானந்தர் வீதி கொழும்புத்துறையில் வசிப்பவருமான கைலாசபிள்ளை கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தசாமி — சகிவதி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், கைலாசபிள்ளை (முன்னாள் கிராம சபைத் தலைவர் — சேமன்), வள்ளியம்மை தம்பதியின் மருமகளும், காலஞ்சென்ற யோகாம்பிகை முத்துக்குமாரசாமி, காலஞ்சென்ற பாலச்சந்திரன் ஆகியோரின் சகோதரியும், இராசனின் தாயாரும், திருவருட்செல்வியின் சிறிய தாயாரும், அருளாம்பிகை, கனகேந்திரன் (ஈழவேந்தன்), புனிதவதி நடராசா, கணேசமூர்த்தி, மகேஸ்வரிதேவி, விக்கினேஸ்வரன் (கிளார்-இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதி), அமிர்தயோகநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (30-7-94) பி. ப. 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தண்டி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
கை. கணபதிப்பிள்ளை

21, விபுலானந்தர் வீதி,
உபதபால் கந்தோர் ஒழுங்கை,
கொழும்புத்துறை. (32164)


நாளை 31 - 07 - 1994 மாலை 6 - 30

உங்களை அழைக்கிறது

**திருமறைக் கலாமன்றம்**

நடத்தும்

**"கூத்தரங்கு"**

ஒரே மேடையில் 3 கூத்துக்கள்

மன்ற அரங்கு ∴ புனிதவதி ∴ புனித கிறிஸ்தோப்பர் ∴ புனித பத்திரிசியார் மன்ற அரங்கு

**மும்முனைப் போட்டி நிகழ்வு**

(ஒ/8803)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org